அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 16/2023

எனது இலக்கம் : EST-6/03/LEA/3182(3)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2023.09.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>தத்தெடுக்கப்பட்ட குழந்தையை பராமரிப்பதற்காக</u>**

**<u>அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு விடுமுறை வழங்குதல்</u>**

தாபனக் கோவையின் XII வது அத்தியாயத்தின் 18வது பிரிவு தொடர்பில் உங்கள் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. அந்த அத்தியாயத்தின் 18 ஆம் பிரிவுக்கு, அமைவாக 18:11:4 மற்றும் 18:12 என புதிய உப பிரிவுகளை உள்ளடக்குவதற்கு, 2023.06.26 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

18:11:4 அரசில் நிரந்தர உத்தியோகத்தருக்காக தத்தெடுக்கப்பட்ட குழந்தையை வளர்ப்பதற்கு 03 வேலை நாட்கள் விசேட மகப்பேற்று லீவினைப் பெற்றுக்கொள்வதற்கு, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு உரிமை உண்டு. மேலும், இந்த லீவினைப் பெற, தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் வயது 10 மாதங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும், மேலும் குழந்தையை தத்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களினுள் இந்த லீவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறித்த உத்தியோகத்தர்கள் தமது விவாகச் சன்றிதழ், குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் குழந்தையை தத்தெடுக்கும் உரிம மாற்ற வழக்கின் தீர்ப்பு என்பவற்றினைச் சமர்ப்பித்து விசேட லீவினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

18:12 தத்தெடுக்கப்பட்ட குழந்தையை வளர்ப்பதற்காக நிரந்தர பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படும் விடுமுறை

18:12:1 ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்காக ஒரு விசேட சந்தர்ப்பமாக கருதி இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் ஒழுங்கில் அதிகபட்சம் 04 மாதங்கள் வரை தொடர்ச்சியாக விடுமுறை வழங்க முடியும்.

18:12:1:1 பொது விதிகளின் கீழ்,

I. இதன் பிரிவு 5 மற்றும் பிரிவு 8 இன் படி லீவுகள் மற்றும் கனிஷ்ட / ஆரம்ப நிலை பெண் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பிலாயின் பிரிவு 26 இன் படி விடுமுறைகள்
II. இதன் பிரிவு 10ன் படி காலங் கடந்த விடுமுறைகள்
III. இதன் பிரிவு 21ன் கீழ் அரை ஊதிய விடுமுறைகள்
IV. இதன் பிரிவு 22ன் படி ஊதியமற்ற விடுமுறைகள்

18:12:1:2 ஆசிரியை தொடர்பிலான விடயத்தில்,

I. இதன் உப பிரிவு 24:3 இன் படி விடுமுறைகள்
II. இதன் 24:4 மற்றும் 24:5 ஆகிய உட்பிரிவுகளின் கீழ் சுகயீன விடுமுறைகள்
III. இதன் உபபிரிவு 24:6 இன் படி சம்பளமற்ற விடுமுறைகள்

18:12:1:3 ஒரு பெண் போலீஸ் சார்ஜென்ட் அல்லது ஒரு பெண் போலீஸ் கான்ஸ்டபிள் விடயத்தில்,

I. இதன் பிரிவு 8 இன் படி விடுமுறைகள்
II. இதன் பிரிவு 10ன் படி காலங் கடந்த விடுமுறைகள்
III. இதன் பிரிவு 21ன் படி அரை ஊதிய விடுமுறைகள்
IV. இதன் பிரிவு 22ன் படி ஊதியமற்ற விடுமுறைகள்

18:12:2 மேலே குறிப்பிட்டபடி விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் போது பின்வரும் தேவைகள் மற்றும் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை குறித்த பெண் உத்தியோகத்தர் வாயிலாக தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

18:12:2:1 தத்தெடுப்பதற்காக பெற்றுக்கொள்ளும் குழந்தையின் வயது 10 மாதங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும் மற்றும் அக்குழந்தையின் பிறப்புச் சான்றிதழின் உண்மையான பிரதியொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

18:12:2:2 குழந்தை சட்டபூர்வமாக தத்தெடுக்கப்பட்டிருத்தல் அல்லது குழந்தையை சட்டபூர்வமாக பெறுவதற்கான நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட வேண்டும்.

18:12:3 இந்த லீவு பிள்ளையின் சட்ட ரீதியான பாதுகாவலர் தொடர்பில் நீதிமன்றத்தில் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது பிள்ளையின் சட்ட ரீதியான பாதுகாவலர் தொடர்பில் நீதிமன்றத்தால் இடைக்கால உத்தரவொன்று வழங்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது பிள்ளையைத் தத்தெடுப்பது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் பிள்ளையின் பிறப்பிலிருந்து 10 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், முன்னர் கூறப்பட்ட

தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் நாள், பிள்ளையின் பிறப்பிலிருந்து 10 மாதங்களின் வரும் ஒரு நாளாக இருப்பின், இந்த ஏற்பாடுகளுக்கு இணங்க லீவு பெறுவதற்கு உரிமையில்லை.

18:12:4 ஊதியமற்ற விடுமுறை வழங்குவதற்கு முன்பு,பெண் உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்கள் அல்லது முற்பணத்தினை, மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளை தவறாது செலுத்துவதற்காக மகிழ்ச்சிகரமான செயற்திட்டமொன்றை செய்வதற்கு அவ் பெண் உத்தியோகத்தர் வகைசெய்தல் வேண்டும் என்பதுடன், அது முறையாக நடைபெறுகின்றதென திணைக்களத் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

18:12:5 விடுமுறை அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தை இறந்தால், அதிலிருந்து 07 நாட்களுக்கு பின்னர் இந்த விடுமுறை இரத்து செய்யப்படும்.

18:12:6 இதன் கீழ் வழங்கப்படும் அரை ஊதியம் அல்லது ஊதியம் இல்லாத விடுமுறை சம்பள உயர்வு அல்லது ஓய்வூதிய நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்காது. அந்தக் காலப்பகுதியில் ஏற்படும் வெற்றிடங்களின் போதும், பதவி உயர்வுகளை வழங்குவதற்கும் அந்த விடுமுறை காலப்பகுதி செயலில் உள்ள சேவைக் காலமாகக் கருதப்பட வேண்டும்.

18:12:7 இந்த விசேட விடுமுறை தத்தெடுக்கும் குழந்தையை பராமரிப்பதற்காக மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

03. இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2023.06.26 தினத்தன்றிலிருந்து செயற்படும்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk